# வளம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

காலாண்டுச் செய்திமடல்

ஜனவரி 2007 மலர் 2 இதழ் 4

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.




## அனைவருக்கும் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்!

## சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீரமைக்கும் திட்டம்



*சித்திவிநாயகபுரத்திலுள்ள தாவரக் கரைசல் தயாரிப்பகம்*

"தி வெட்லேண்ட்ஸ் இன்டர்நேஷனல் சவுத் ஏஷியா" என்ற நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், சுனாமியால் பாதிக்கப்பட்ட நிலங்களைச் சீரமைக்கும் திட்டத்தை ஜுலை 2006 முதல் சீர்காழியில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, சித்திவிநாயகபுரம், வழுதலைக்குடி, பெரியக் குத்தகை மற்றும் புஷ்பவனம் கிராம பயனீட்டாளர்களுக்கு இயற்கைவழி நெல் சாகுபடி மற்றும் இயற்கைவழி பூச்சி மற்றும் நோய் மேலாண்மை என்ற தலைப்பில் மூன்று பயிற்சிகள் நடத்தப்பட்டன. சித்திவிநாயகபுரத்தில் சுமார் 45 ஏக்கர் நிலப்பரப்பில் இயற்கைமுறையில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும், இங்கு ஒரு தாவரக் கரைசல் தயாரிப்பகமும் கட்டப்பட்டுள்ளது. அக்டோபர் 11ஆம் தேதியன்று, திரு. மது, திரு. தட்சிணாமூர்த்தி மற்றும் திரு. மணி ஆகியோர் இந்தத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட பணிகளை மதிப்பீடு செய்தனர். மேலும், சித்திவிநாயகபுரத்திலுள்ள காய்கறித் தோட்டங்கள், மண்புழு உரத் தொட்டிகள் மற்றும் தாவரக் கரைசல் தயாரிப்பகம் போன்றவைகளைப் பார்வையிட்டனர். டிசம்பர் 13ஆம் தேதியன்று சீர்காழியிலுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதியில் நமது மையத்தால் செயல்படுத்தப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை, வோல்ட் வைல்ட்லைஃப் ஃபண்ட் (WWF) நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி. அகிலா அவர்கள் பார்வையிட்டார். வழுதலைக்குடி மற்றும் மணல்மேடு கிராம பயனீட்டாளர்களுக்கு டிசம்பர் 15 மற்றும் 29ஆம் தேதிகளில், இயற்கைவழி நெல் சாகுபடி, பூச்சிகள் மற்றும் நோய்களை இனம் காணுதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

## சுக்கன்கொல்லை பயணம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செயல்பாடுகளில் ஆர்வம் கொண்ட நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள், டிசம்பர் 2ஆம் தேதியன்று, சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆராய்ச்சி பண்ணைக்கு வந்திருந்தனர். இந்தக் குழுவில் பேராசிரியர் எஸ். ராஜலட்சுமி, டாக்டர் ரமணன் மற்றும் டாக்டர் ஷெரீன், திரு. ரவிசங்கர் மற்றும் ஷீலா ரவிசங்கர், திரு. ஆனந்த் மற்றும் அபிதா சேதுராமன் மற்றும் திருமதி ஹேமா கண்ணன் ஆகியோர் அடங்குவர். இவர்களுக்கு நமது பண்ணையின் செயல்பாடுகள் பற்றி விவரிக்கப்பட்டது. மேலும், இவர்கள் நமது மையத்தினால் பாதுகாக்கப்படும் பாரம்பரிய நெல் ரகங்கள், மாதிரி காய்கறி தோட்டம், பண்ணையில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள், பசுமை வீடு, மக்கு உரம் தயாரிப்பகம் மற்றும் மூலிகை தோட்டம் போன்றவற்றைப் பார்வையிட்டனர்.



*சுக்கன்கொல்லைப் பண்ணையில் சில நண்பர்கள்*

### புதிய மின்னஞ்சல்

எங்களைக் கீழ்கண்ட மின்னஞ்சல்களில் தொடர்பு கொள்ளவும் **ciksorg@gmail.com** அல்லது **info@ciks.org**

எங்கள் பழைய மின்னஞ்சல் **ciks@vsnl.com** தற்போது உபயோகத்தில் இல்லை. தங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றி!



# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

### விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இயற்கை வேளாண்மைத் திட்டம் - II

இந்தத் திட்டத்தை ஃபோர்ட் நிறுவனத்தின் உதவியுடன் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்காக காஞ்சிபுரம், திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலுள்ள 27 கிராமங்களிலிருந்து இயற்கைவழி வேளாண்மைக்கு சுமார் 420.11 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நெல், நிலக்கடலை, உளுந்து, கேழ்வரகு, மிளகாய் மற்றும் கடுகு போன்றவை சுமார் 173.85 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு விதைகள், வேப்பம் பிண்ணாக்கு, கடலைப் பிண்ணாக்கு, உயிர் உரங்கள், மண்புழுக்கள் போன்ற இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. அக்டோபர் 3ஆம் தேதி, இயற்கைவழி வேளாண்மை மற்றும் வேளாண் நிலப் பராமரிப்பு என்ற தலைப்பில் காஞ்சிபுர மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு ஒரு நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், “அகக்கட்டுப்பாட்டு முறைமையும், சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகளும்” என்ற தலைப்பில் திருவண்ணாமலை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுர மாவட்டப் பயனீட்டாளர்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. நாகப்பட்டின மாவட்டப் பயனீட்டாளர்களுக்கு அகக் கட்டுப்பாட்டு முறைமையின் விவரங்களைப் பதிவு செய்யும் முறைகள் பற்றி டிசம்பர் 4ஆம் தேதியன்று அகணியில் பயிற்சி அளிக்கப்பட்டது. டிசம்பர் 16ஆம் தேதியன்று, சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்க உறுப்பினர்கள் 18 பேர் புளியங்குடியிலுள்ள இயற்கைவழி கரும்பு மற்றும் எலுமிச்சை சாகுபடி வயல்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை திட்டம்

புது தில்லியில் உள்ள கபார்ட் (CAPART) நிறுவனத்தின் உதவியுடன் உணவுக்கு உத்தரவாதம் அளிக்கும் இயற்கை வேளாண்மை என்னும் திட்டத்தைக் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள பத்து கிராமங்களில் செயல்படுத்தி வருகிறோம். இந்தப் பத்து கிராமங்களிலும் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. சுமார் 55 ஏக்கர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 28 ஏக்கரில் பாரம்பரிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 225 விவசாயிகள் இயற்கைவழி நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். இந்த விவசாயிகளுக்கு 14 நெல் ரகங்களின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. நவம்பர் 24 மற்றும் 27ஆம் தேதிகளில் எடையூர், வளத்தோடு மற்றும் வேறு பத்து கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்குத் தாவரக்கரைசல் தயாரிப்பு, பதிவேடுகளைப் பராமரித்தல், மண்வளப் பாதுகாப்பு, இயற்கைவழி பூச்சிக்கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளின் பயன்கள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கொளத்தாஞ்சேரி இயற்கை விவசாயிகள் சங்கத்திற்குப் பவர் டில்லர் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், கொளத்தாஞ்சேரியில் கட்டப்பட்டுள்ள விதை வங்கி நவம்பர் 27ஆம் தேதியன்று திறந்து வைக்கப்பட்டது.

### நெற்பயிர் சாகுபடி - விதை முதல் சந்தை வரை

பெங்களூரிலுள்ள ஹீவாஸ் (Hivos) நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் சித்திரவாடி, கலியப்பேட்டை மற்றும் கொளத்தாஞ்சேரி கிராமங்களில் மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர் களுக்கு உளுந்து, நிலக்கடலை மற்றும் ADT-36, ADT-37 நெல் ரக விதைகள் வழங்கப்பட்டுள்ளன. கத்தரியில் காணப்படும் அசுவுணிகள், புள்ளி வண்டுகள், தண்டுத் துளைப்பான் மற்றும் நெல்லில் காணப்படும் கதிர் நாவாய் பூச்சிகள் முறையே ஐந்திலைக் கரைசல் மற்றும் இஞ்சி, பூண்டு, மிளகாய் கரைசலால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அக்டோபர் 4, 6 மற்றும் 12ஆம் தேதிகளில் முறையே கொளத்தாஞ்சேரி, சித்திரவாடி மற்றும் கலியப்பேட்டை கிராமப் பயனீட்டாளர்களுக்குச் சுயஉதவிக் குழுக்களின் நோக்கம், பயிர் பாதுகாப்பு, வளர்ச்சி ஊக்கிகளின் பயன்கள் மற்றும் மண்வளப் பாதுகாப்பில் விவசாயிகளின் அனுபவங்கள் பற்றி பயிற்சிகள் அளிக்கப்பட்டன. கலியப்பேட்டை கிராமத்தில் விதை வங்கி கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

### காய்கறிகளில் விருட்சாயுர்வேத பரிசோதனை

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் உதவியுடன் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் செம்பதனிருப்பு கிராமத்தில், சிறியாநங்கை, ரயில் பூண்டு மற்றும் ஆமணக்கு கரைசல்களைப் பயன்படுத்தி கத்தரியில் புள்ளி வண்டுகளைக் கட்டுப்படுத்துவதற்கான சோதனையை மேற்கொண்டுள்ளோம். பயனீட்டாளர்களுக்கு வேப்பம் பிண்ணாக்கு, பொன்னி நெல் ரகம், கத்தரி, வெண்டை, மிளகாய் மற்றும் தக்காளி போன்றவைகளின் விதைகள் வழங்கப்பட்டுள்ளன. நவம்பர் 16ஆம் தேதியன்று, ஆலங்காடு கிராமப் பயனீட்டாளர்களுக்கு “இயற்கைவழி காய்கறிச் சாகுபடி” என்ற தலைப்பில் பயிலரங்கு ஒன்று நடத்தப்பட்டது. இந்தப் பயிலரங்கில் சுமார் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். மேலும், டிசம்பர் 21ஆம் தேதியன்று, டாக்டர் அறிவுடைநம்பி அவர்களின் உதவியுடன் காய்கறிச் சாகுபடியில் மகசூலைப் பாதிக்கும் முக்கிய பூச்சிகள் பற்றி ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது. இந்தப் பயிற்சியில் அல்லிவிளாகம், செம்பதனிருப்பு, ஆதமங்களம் மற்றும் ஆலங்காடு கிராமங்களைச் சேர்ந்த சுமார் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதுவரை மேற்கொள்ளப்பட்ட விதைநேர்த்தி ஆய்வுகளின் முடிவுகள் தொகுக்கப்பட்டுள்ளன.

### தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறையின் உதவியுடன் தாவரக் கரைசல்களின் சேமிப்புக் காலத்தை அதிகரிக்கும் திட்டத்தைச் சீர்காழியில் செப்டம்பர் 2005 முதல் செயல்படுத்தி வருகிறது. ஆய்வகத்தில் வளர்க்கப்படும் அசுவுணிகள் 58வது தலைமுறை யிலும், படைப்புழுக்கள் 2வது ஆய்வகத் தலைமுறை யிலும் உள்ளன. அசுவுணிகளில் “பொக்கே முறை யில்” சிறியாநங்கை கஷாயத்தைப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நமது ஆய்வுக் கூடத்தில் ஆடாதோடை மற்றும் எருக்கு ஷாரம், வசம்பு மற்றும் கோமிய அர்க்கம் போன்ற வை ஆய்விற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 2 மற்றும் 31ஆம் தேதிகளில் இருவக்கொல்லை மற்றும் வழுதலைக்குடி கிராமங்களைச் சேர்ந்த சுமார் 67 பெண் விவசாயிகளுக்கு இரண்டு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. சீர்காழியில், கத்தரி புள்ளி வண்டுகள் மற்றும் இலைச்சுருட்டுப் புழுக்களை வளர்ப்பதற்காக நிழல்வலைக் கூடம் ஒன்று அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பூச்சிக்கட்டுப்பாட்டில் விலங்கினப் பொருட்களின் பயன்கள்

நெதர்லாந்திலுள்ள காம்பாஸ் நிறுவனத்தின் உதவியுடன் “பூச்சிக்கட்டுப்பாட்டில் விலங்கினப் பொருட்களின் பயன்கள்” என்ற திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக அகணியில் பொன்னி ரக நெல்லில், பசு மற்றும் எருதின் பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்ட பஞ்சகவ்யத்தை வளர்ச்சி ஊக்கியாகப் பயன்படுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெண்டையில், வெவ்வேறு அடர்த்திகளில்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

பசும்பால் மற்றும் பஞ்சகவ்யத்தைப் பயன்படுத்தி விதைநேர்த்தி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நவம்பர் 4 மற்றும் 5ஆம் தேதிகளில், ''பாரம்பரிய வேளாண் முறைகளை மதிப்பீடு செய்தல் - ஆய்வும், அணுகுமுறையும்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் எப்.ஆர்.எல்.எச்டி., ஐடி.ஈ.ஏ. மற்றும் கே.பி.பி. நிறுவன உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். நவம்பர் 30ஆம் தேதியன்று, எச். கணேஷ் மற்றும் ஆர். மகாலட்சுமி தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர் வணங்காமுடி அவர்களைச் சந்தித்து விதைநேர்த்தி ஆய்வுகள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் முறைகள் பற்றி கேட்டறிந்தனர்.

### தொழில்நுட்ப ஆதார மையத்தின் செயல்பாடுகள்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் தொழில்நுட்ப ஆதார மையம் (Technology Resource Centre) அக்டோபர் 2005 முதல் செயல்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இயற்கை வேளாண்மை தொழில் நுட்பங்கள் திருவள்ளூர், திருவண்ணாமலை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 20 விவசாயிகள் மண்புழு உரத்தயாரிப்பு, மட்குஉரத் தயாரிப்பு, தாவரக்கரைசல் தயாரிப்பு மற்றும் அசோலா, சணப்பை மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடி, இயற்கைவழி காய்கறி மற்றும் பாரம்பரிய நெல் சாகுபடி, கோழி வளர்ப்பு, மாதிரி மூலிகை மற்றும் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். பஞ்சகவ்யம் மற்றும் அமிர்தக் கரைசலின் செயல்படும் முறை பற்றிய ஆய்வுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. பயிற்சி மையம் கட்டும் பணி நடைபெற்று கொண்டிருக்கிறது.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையிலுள்ள நமது ஆய்வுப் பண்ணையில், 12 பாரம்பரிய நெல் ரகங்களும், மூன்று வாழை ரகங்களும் பயிரிடப்பட்டுள்ளன. *கிளிரிசீடியா* போத்துகளைப் பயன்படுத்தி தடுப்புப் பகுதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், நான்கு ரக மாமரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. வெண்டையில், திரிகடுகத்தைத் தெளிப்பதினால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிவதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வயலில் காணப்படும் கருவண்டு மற்றும் அசுவுணிகள் முறையே 10% வேப்ப இலைக்கரைசல் மற்றும் 3% ரயில் பூண்டு கஷாயத்தினால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. நவம்பர் 21ஆம் தேதியன்று, சின்னநத்தம் கிராம விவசாயிகளுக்கு, பூச்சிகள் மற்றும் நோய்களை இனம் கண்டறியும் செய்முறை பயிற்சி, விவசாயிகள் களப் பயிற்சி (Farmer's Field School) முறையின் கீழ் நடத்தப்பட்டது.

### சுவிட்சர்லாந்தில் நடைபெற்ற கருத்தரங்கு

பாரம்பரிய முறைகளின் அடிப்படையிலான வளர்ச்சி என்ற தலைப்பில் சர்வதேசக் கருத்தரங்கு அக்டோபர் 3-5 ஆம் தேதிகளில் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனீவாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டம் காம்பாஸ் (COMPAS), சிடிஇ - பெர்ன் பல்கலைக் கழகம் (CDE-University of Bern), ஐயுசிஎன் (IUCN), கே.எப்.பி.இ. (KFPE) மற்றும் ஜெனீவா பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சி மையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் 28 நாடுகளைச் சேர்ந்த சுமார் 110 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். நமது மையத்திலிருந்து ஆ.வே. பாலசுப்பிரமணியன் மற்றும் கே. விஜய லட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இயற்கை வேளாண் சான்றுக்கான புற ஆய்வு

இயற்கைவழி வேளாண்மைச் சான்றிதழ் பெறுவதற்கான புற ஆய்வு அக்டோபர் 23 முதல் 26ஆம் தேதி வரை பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்தைச் சேர்ந்த திரு. அஜித்குமார் அவர்களால் நடத்தப்பட்டது. இந்த ஆய்வின்போது, எல்லா திட்ட அறிக்கைகளும் சரிபார்க்கப்பட்டன. மேலும், அவர் ஈசூர் மற்றும் சுக்கன்கொல்லை பண்ணைகளையும், சித்திரவாடி, கொளத்தாஞ்சேரி மற்றும் கலியப்பேட்டையிலுள்ள இயற்கை வேளாண் வயல்களையும் ஆய்வு செய்தார். அடுத்து, செங்கல்பட்டு அலுவலகத்திலுள்ள அகக்கட்டுப்பாட்டு முறைமை பணிகளில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

### சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வு முகாம்

நவம்பர் 8ஆம் தேதியன்று, சுற்றுப்புறச்சூழல் விழிப்புணர்வு முகாம் ஒன்றை நபார்ட் வங்கி (NABARD) காஞ்சிபுரம் மாவட்டத்தில் நடத்தியது. நமது மையத்திலிருந்து கே. சுப்பிரமணியன் இதில் கலந்து கொண்டு ரசாயன உரத்தின் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள், இயற்கைவழி வேளாண்மையின் முக்கியத்துவம் மற்றும் மண்புழு உரத்தயாரிப்பு பற்றி உரையாற்றினார்.

### இயற்கைவழி இந்தியா 2006

நவம்பர் 9 - 12 தேதிகளில் பெங்களூரில் உள்ள ஐசிசிஓஏ (ICCOA) நிறுவனம், ''இயற்கைவழி இந்தியா 2006'' என்ற கண்காட்சி, உணவுத் திருவிழா மற்றும் கருத்தரங்கை, பெங்களூரில் நடத்தியது. இந்தக் கண்காட்சியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையமும், பெங்களூரில் உள்ள கிராம மூலிகை கம்பெனியும் இணைந்து தங்கள் வெளியீடுகளைப் பார்வைக்கு வைத்து விற்பனை செய்தனர்.

### புது தில்லிப் பயணம்

நவம்பர் 15 மற்றும் 16ஆம் தேதிகளில், உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் புது தில்லியில் கருத்தரங்கு ஒன்றிற்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்தக் கருத்தரங்கில் கே. விஜயலட்சுமி அவர்கள் கலந்துகொண்டு நெல், நிலக்கடலை, வெண்டை மற்றும் தக்காளி பயிர்களுக்கு நமது மையத்தினால் உருவாக்கப்பட்ட இயற்கைவழி சாகுபடி தொழில்நுட்பங்களைப் பற்றி விவரித்தார்.

### ரோமில் நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டம்

இயற்கைவழி வேளாண்மைச் சான்றளிக்கும் முறைகள் பற்றிய கலந்தாய்வுக் கூட்டம் ஐஃபோம் (IFOAM) நிறுவனத்தினால் நவம்பர் 15 - 17ஆம் தேதிகளில் ரோமில் நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்தில் சுமார் 30 நாடுகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நமது மையத்திலிருந்து எஸ். ஆறுமுகசாமி மற்றும் சுபாஷிணி ஸ்ரீதர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறைக் கூட்டம்

தில்லியிலுள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையிடமிருந்து நிதியுதவி பெறும் பல்வேறு அமைப்புகளின் கூட்டம் நவம்பர் 27 மற்றும் 28ஆம் தேதிகளில் டேஹ்ராடூனில் நடைபெற்றது. நமது மையத்திலிருந்து சுபாஷிணி ஸ்ரீதர் இதில் கலந்து கொண்டு, அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் நிதயுதவி அளிக்கப்படும் நமது ஆய்வுத் திட்டங்களான காய்கறிகளுக்கான விருட்சாயுர்வேதம் பற்றியும், தாவரக்கரைசல்களின் சேமிப்பு காலத்தை அதிகரிக்கும் திட்டம் பற்றியும் விவரித்தார்.

### காம்பாஸ் கூட்டம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம், டிசம்பர் 6ஆம் தேதியன்று, காம்பாஸ் திட்டத்தின் இந்திய உறுப்பினர் கூட்டத்தை நடத்தியது. இந்தக் கூட்டத்தில், பாரம்பரிய வேளாண்மையில் விலங்கின பொருட்களைப் பயன்படுத்தும் திட்டத்தின் பணிகள் அகமதிப்பீடு செய்யப்பட்டன. இந்தக் கூட்டத்தில், கே.பி.பி, எப்.ஆர்.எல்.எச்டி. மற்றும் ஐடி.இ.ஏ. நிறுவனங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### ஹைதராபாத் பயணம்

''பாரம்பரிய காய்கறிகள் மற்றும் பயறு வகைகள்'' என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு ஒன்று ஹைதராபாத்தில் டிசம்பர் 12 மற்றும் 15ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. நமது மையத்தின் சார்பாக எஸ். ஆறுமுகசாமி, பி. முருகன் மற்றும் ஏ. சுகந்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சுற்றுசூழல் சீரமைப்பு கருத்தரங்கு

டிசம்பர் 19ஆம் தேதியன்று, மைசூரிலுள்ள இயற்கை பாதுகாப்பு மையமும் (The Nature Conservation Foundation) தமிழ்நாடு அரசின் வனத்துறையும் இணைந்து ''பாதிக்கப்பட்ட சுற்றுச்சூழலைச் சீரமைத்தல்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்றை நடத்தியது. நமது மையத்திலிருந்து ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு ''பாரம்பரிய அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி சீர்குலைக்கப்பட்ட வேளாண் நிலங்களைச் சீரமைத்தல்'' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### முதலுதவி பயிற்சி

டிசம்பர் 20ஆம் தேதியன்று, செயின்ட் ஜான்ஸ் ஆம்புலன்சைச் சேர்ந்த திரு. பி. சந்திரன் அவர்கள், இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செங்கல்பட்டு அலுவலகத்தில் முதலுதவி பயிற்சியை நமது பணியாளர்களுக்கு நடத்தினார்.

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

**இயற்கைவழி சாகுபடி நுட்பங்கள்**

## மக்கு உரத்தயாரிப்பு




பசுமைப்புரட்சியின் விளைவாக விவசாயிகள் வீரிய ஒட்டு ரகங்கள், ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளைப் பெருமளவில் பயன்படுத்த துவங்கினார்கள். இதன் காரணமாக மண்வளமும், மண்ணில் வாழும் நுண்ணுயிரிகளின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகிறது. மேலும், பெரும்பாலான விவசாய நிலங்கள் பயிர் சாகுபடிக்குத் தகுதியற்ற களர் உவர் நிலங்களாக மாறி வருகின்றன. இதனால், விவசாயிகள் தங்கள் நிலங்களை மீண்டும் வளமுடையதாக்க மாற்று வழிமுறைகளைப் பின்பற்ற துவங்கியுள்ளார்கள். அவற்றில் மிக முக்கியமானது மக்குஉரத்தின் பயன்பாடாகும். இந்தப் படத்தில் சுழற்சிமுறை மற்றும் குவியல்முறையில் மக்குஉரம் தயாரிக்கும் முறைகள் பற்றியும், மண்புழு உரம் தயாரிக்கும் முறை பற்றியும் விவரிக்கப்பட்டுள்ளது.

**விலை : ரூ. 100/- (தமிழ் / ஆங்கிலம்)**

இந்தக் குறுந்தகடைப் பெற விரும்புவோர் குறுந்தகட்டின் விலையுடன் 30% தபால் செலவையும் சேர்த்து சென்னையில் மாற்றத்தக்க பணவிடை (M.O.) அல்லது வரைவோலையை (D.D.) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (Centre for Indian Knowledge Systems) என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

# வருகையாளர் பதிவேடு

- அக்டோபர் 2ஆம் தேதியன்று, பிடிஏ கட்டட கலைஞர்கள் திரு. சபீர் அகமது அவர்களும், திருமதி கல்பனா அவர்களும் வந்திருந்தார்கள்.
- அக்டோபர் 18ஆம் தேதியன்று, ஆனந்த விகடன் பத்திரிக்கை அலுவலகத்திலிருந்து திரு. பொன் தனசேகரன் அவர்கள் வந்திருந்தார்.
- அக்டோபர் 23ஆம் தேதியன்று, பெங்களூரிலுள்ள ஐ.எம்.ஓ. (IMO) நிறுவனத்திலிருந்து திரு. அஜித் குமார் அவர்கள் வந்திருந்தார்.
- அக்டோபர் 25ஆம் தேதியன்று, ஹைதிராபாத்திலுள்ள ஸ்ரேஷ்டா ஆர்கானிக்ஸ் நிறுவனத்திலிருந்து திரு. பிரசாத் அவர்கள் வந்திருந்தார்.
- நவம்பர் 9ஆம் தேதியன்று, பசுமை விகடன் பத்திரிக்கை நிருபர் திரு. பாலுதென்னவன் அவர்கள் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செங்கல்பட்டு அலுவலகத்திற்கு வந்திருந்தார்.
- நவம்பர் 20ஆம் தேதியன்று, ஆக்ஸ்போர்ட் (Oxford University) பல்கலைக்கழகத்தின் கிரீன் கல்லூரியிலிருந்து டாக்டர் ஜெர்ரி போடேக்கர் அவர்கள் வந்திருந்தார்.
- நவம்பர் 25ஆம் தேதியன்று, வால்பாறையிலுள்ள இயற்கை பாதுகாப்பு மையத்திலிருந்து (Nature Conservation Foundation) டாக்டர் சங்கர் ராமன் அவர்களும் டாக்டர் திவ்யா முடப்பா அவர்களும் வந்திருந்தார்கள்.
- டிசம்பர் 6ஆம் தேதியன்று, ஜப்பானிலுள்ள ஏ.டி.எப். (Atelier for Development and the Future) நிறுவனத்திலிருந்து திரு. கமாத்தா யோஜி அவர்கள் நமது சென்னை அலுவலகத்திற்கும், சுக்கன்கொல்லையிலுள்ள பண்ணைக்கும் வந்திருந்தார்.
- டிசம்பர் 8ஆம் தேதியன்று, தான் (Dhan) நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் வி. பவானி சங்கர் அவர்கள் வந்திருந்தார்.
- டிசம்பர் 20ஆம் தேதியன்று, சென்னை பல்கலைக்கழகத்தின் தாவரவியல் உயர்கல்வி மையத்திலிருந்து டாக்டர் மதிவாணன் அவர்களும், டாக்டர் ஜெயபிரகாஷ்வேல் அவர்களும் வந்திருந்தார்கள்.

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி, து. து. நிர்மலா தேவி & டாக்டர் கே. விஜயலட்சுமி
வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்-அஞ்சல்

பெறுநர்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம்
நடைமுறை வாழ்க்கைக்கு மரபு அறிவியல்
30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை - 600 085.
தொலைபேசி : 91-044-24471087, 24475862 தொலைநகல் : 91-044-24471114
மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**